# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

**முறையீட்டு மனு எண்: 709/2016/பே**

**ஆணை எண் 53 /2018/நாள் . 20 –03–2018**

**திரு. எஸ். மன்மதராஜன்,**
**கழுகுமலை மக்கள் நல கூட்டமைப்பு,**
**கழுகுமலை அஞ்சல் –628 552,**
**கோவில்பட்டி தாலுகா,**
**தூத்துக்குடி மாவட்டம்.** -- **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**கழுகுமலை பேரூராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம் – 628 558.** -- **எதிர் மனுதாரர்**

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை பேரூராட்சி, கழுகுமலை மக்கள் நல கூட்டமைப்பு செயலர் திரு. எஸ். மன்மதராஜன் என்பவரின் 05.07.2016 ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 18.07.2016 அன்று பெறப்பட்டு 709/16 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை பேரூராட்சியில் தெரு பெயர் பலகைகள் அமைத்தலில் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், டெண்டர்தாரர்களுக்கு அதிக பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், மேலளவுகள் செய்யப்படாமல் உள்ளதாகவும் தெரிவித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 03.08.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித எண் ந.க. 149/2016/நாள் 19.08.2016ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை தேர்வுநிலை பேரூராட்சியில், மொத்தம் 94 தெருக்கள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பஜார் மற்றும் முக்கிய வீதிகள் மற்றும் போக்குவரத்து சாலைகள் ஆகிய 29 இடங்களில் தெருப்பெயர் பலகைகள் சில்வர் கம்பம் கொண்டு நிறுவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒவ்வொரு தெருப் பெயர் பலகையும் பேரூராட்சி மன்ற தீர்மான எண் 249/நாள் 21.05.2013 ன் மூலம் உரிய அனுமதி பெற்று திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 5920 (2)/2013/ப.1/நாள் 25.11.2013 மற்றும் 26.11.2013ன்படி உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளிக்கு மன்றதின் அங்கீகாரம் பெற்று (தீர்மான எண் 338/நாள் 20.01.2016) பட்டியல் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை எனவும் செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் தெருப் பெயர் பலகை வெயில் மற்றும் மழையினால் தெருக்களின் பெயர் மட்டும் உறிந்ததை ஒப்பந்தக்காரரால் மீண்டும் சரி செய்யப்பட்டது எனவும் இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை எனவும் தனது அறிக்கையில் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக தனது விளக்கத்தினை அளிக்க முறையீட்டு மனுதாரரை இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2016ல் நேரில் ஆஜராக இம்முறைமன்ற நடுவ 08.12.2016ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 23.12.2016ம் நாளிட்ட கடிதத்தில் தான் கழுகுமலையில் குடியிருந்து வருவதாகவும், உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவரின் அழைப்பாணையின்படி நேரடி விளக்கம் அளிக்க பயணப்படியாக ரூ 1500– வழங்கினால் நேரடி விசாரணைக்கு வர இயலும் எனவும், தெரிவித்து 26.12.2016ம் நாளன்று இம்முமைமன்ற நடுவத்தில் விசாரணையில் ஆஜராகவில்லை.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 30.12.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலரின் 19.08.2016ம் நாளிட்ட கடித நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைத்து அதன் மீதான ஆட்சேபணை மற்றும் விளக்கங்களை 10 நாட்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக தனது விளக்கத்தினை அளிக்க, இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2017 அன்று நேரில் ஆஜராக இம்முறைமன்ற நடுவ 08.12.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2017 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் 18.04.2016 முதல் கழுகுமலை பேரூராட்சியின் செயல் அலுவவராக இருந்து வருவதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். இதற்கு முன்பு நாசரேத் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்ததாக தெரிவித்துள்ளார். கழுகுமலை மக்கள் கூட்டமைப்பின் செயலாளர் திரு மன்மதராஜனுடைய மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் இது முழுவதும் தனக்கு முன்பு இருந்த செயல் அலுவலர் திரு போ. சேகர் என்பவரின் பணிக்காலத்திற்கு சம்பந்தப்பட்டது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தற்போது அவர் திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் பேரூராட்சியில் பணிபுரிவதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரர் கழுகுமலை பேரூராட்சியில் பெயர் பலகை மற்றும்

தெரு பெயர் பலகை அமைத்ததில் முறைகேடுகள் நடந்ததாக தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணிகள் முறைப்படி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு அதில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்தவரிடம் பணி விநியோக ஆணைகள் கொடுக்கப்பட்டு இதற்கான ஒப்புதல் பேரூராட்சி மன்றத்தில் பெறப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. நாசரேத் பேரூராட்சியிலும் இதே பணியினை செய்துள்ளார்கள் எனவும் இந்த இரண்டு நிறுவனங்களும், நிறுவன சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்படி நிறுவனம் அளித்துள்ள பட்டியலில் டின் (TIN) நம்பர் மற்றும் GST நம்பர் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இது குறித்த அறிக்கையில் இப்பணி அனைத்தும் 3 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது மழை மற்றும் வெயில் போன்ற காரணங்களினால் சில நிறம் மாறி தெரிவதாக தனது வாக்குமூலத்தில் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலரின் 19.08.2016ம் நாளிட்ட கடிதத்தின் மீதான தனது ஆட்சேபணை மற்றும் விளக்கத்தினை முறையீட்டு மனுதாரர் தனது 03.05.2017ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 15.05.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் கூடுதல் விளக்கங்களுக்கான பதிலறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், கழுகுமலை அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 149/2016/நாள் 23.05.2017ன்படி கூடுதல் விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை பேரூராட்சி பகுதியில் 15 வார்டுகள் அமைந்துள்ளதாகவும், தெருக்களின் பெயர் பலகைகள் அமைத்திட கழுகுமலை பேரூராட்சி மன்ற தீர்மான எண் 249/நாள் 21.05.2013 ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் குறுகிய கால ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஸ்ரீவெங்கடேஸ்வரா ஏஜென்சீஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்திடம், தெருப் பெயர் பலகைகள் 25 எண்ணிக்கை மற்றும் வரவேற்பு பலகை 4 எண்ணிக்கை வாங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதற்குரிய தொகையினை திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் செயல்முறைகள் ஓ.மு.எண். 413/2014/ப.3/நாள்.01.02.2014ன்மூலம்பெறப்பட்டுள்ளதாகதெரிவித்துள்ளார். இத்தொகையினை வழங்க பேரூராட்சி மன்ற தீர்மான எண் 338/நாள். 20.01.2014ன் மூலம் பெறப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். எனவே பணிகள் நடைபெற்றுள்ளதை மனுதாரரும் மறுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பணிகளின் தரத்தினை 2013-14 ல் நடந்துள்ளதை தற்போதைய 2017-18ம் வருடத்தில் அந்த பெயர் பலகைகளின் நிலையினை தெரிவித்துள்ளார் என்பதையும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் தான் 02.05.2017ல் கழுகுமலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பொறுப்பேற்றுள்ளதாகவும் திரு மன்மதராஜன் புகாருக்கு அலுவலக பதிவேடுகளின்படி தனது வாக்குமூலத்தினை தெரிவித்துக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட சாட்சி திரு அ. ராமச்சந்திரதேவர் அவர்களை இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2017 அன்று நேரில் ஆஜராகி தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவ 11.08.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

திரு ராமச்சந்திரதேவர், தனது 04.09.2017ம் நாளிட்ட கடிதத்தில் தான் சென்னைக்கு வர நிதி ஆதாரம் தேவைப்படுவதாகவும் ரூ 2000/- தனது முகவரிக்கு அனுப்பிவைத்தால் தான் ஆஜராவதற்கு சம்மதிப்பதாக கடிதத்தில் தெரிவித்துள்ளதோடு, 11.10.2017ம் தேதியன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை.

கழுகுமலை பேரூராட்சியில் பெயர் பலகைகள் நிறுவியது தொடர்பாக உரிய கள ஆய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டு அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 பிரிவ 6(4) (b) ன் கீழ் இம்முறைமன்ற நடுவ 23.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி தனது கடித ந.க.எண். 3087/2017/ப.3/நாள் 18.12.2017ன் மூலம் தனது ஆய்வறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை பேரூராட்சியானது சுற்றுலாத்தலகமாகவும், புராதன நகரமாகவும் இருப்பதால் கழுகுமலை பேரூராட்சி மன்ற தீர்மான எண்.249/நாள் 21.05.2013 ன்படி முக்கிய தெருக்களில் தெரு பெயர் பலகை நிறுவுவதற்கு பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி தெரிவித்துள்ளார்.

அதன்படி திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 5920 (2)/2013/ ப.1/ நாள் 25.11.2013ன்படி ரூ 4,12,500/- மதிப்பீட்டில் வரவேற்பு பலகைகள் 4 எண்கள் மற்றும் தெரு பெயர் பலகைகள் 25 எண்கள் நிறுவுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் கூடுதலாக ரூ 62,500/- மதிப்பீட்டில் கூடுதலாக 5 எண்கள் தெருப் பெயர் பலகைகள் நிறுவுவதற்கு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 5920(2)/2013/நாள் 26.11.2013ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிர்வாக அனுமதியினை தொடர்ந்து கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலர் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு ந.க.எண். 605/2013/நாள் 16.12.2013ன்படி 4 எண்கள் வரவேற்பு பலகைகள மற்றும் 25 எண்கள் தெருப்பெயர் பலகை அமைக்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பெறப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள திருநெல்வேலி வெங்கடேஸ்வரா ஏஜென்சியின் ஒப்பந்தப்புள்ளி கழுகுமலை பேரூராட்சி மன்ற தீர்மானஎண.338/நாள்.20.01.2014ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வரவேற்பு பலகைகள் மற்றும் தெருப் பெயர் பலகைகள் கழுகுமலை பேரூராட்சியில் பொருத்தியமைக்கு பட்டியல் எண். 4/நாள் 29.01.2014ன் படி ரூ 4,70,500/- க்கு பட்டியல் பெறப்பட்டு பொருட்கள் இருப்பு பதிவேட்டில் பக்கம் 17ல் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி வெங்கடேஸ்வரா ஏஜென்சி நிறுவனத்திற்கு கழுகுமலை பேரூராட்சி செலவு சீட்டு எண் 611/நாள்.03.02.2014ன்படி பட்டியல் தொகை காசோலையாக வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் கோப்புகளின் மூலம் அறியப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காண் பெயர் பலகைகள் அரசு விதிகளின்படி ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு, திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் மேலொப்பம் பெறப்பட்டே ஒப்பந்தக்காரருக்கு காசோலையாக வழங்கப்பட்டுள்ளது எனவும் இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும் திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் 2013 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தெருப் பெயர் பலகைகளில் உள்ள எழுத்துக்கள் இயற்கை சீற்றங்களான மழை மற்றும் வெயில் போன்ற காரணங்களினாலும் சில சமூக விரோதிகளாலும், சிறு குழந்தைகளின் விளையாட்டு போக்கினாலும் சேதப்படுத்தப்பட்டிருந்தது தெரியவந்தததால் பேரூராட்சியின் மேற்காண் நிறுவன ஒப்பந்தக்காரரால் மீள சரி செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளதும் விசாரணையின்போது அறியப்பட்டதாக தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மண்டலம், தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை பேரூராட்சியில் தெருப் பெயர் பலகைகள் நிறுவப்பட்டதில் அரசு விதிகள் முறையாக பின்பற்றப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு, பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட பின்பே ஒப்பந்தக்காரருக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்நிகழ்வில் எந்தவிதமான முறைகேடுகளும் இல்லை என்பது விசாரணையில் அறியப்படுவதாகவும், கழுகுமலை பேரூராட்சியில் தெருப்பெயர் பலகைகள் நிறுவியதில் முறைகேடுகள் ஏதும் இல்லை என்ற குறிப்புரையுடன் தனது அறிக்கையினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ,திருநெல்வேலி அவர்கள் தெரிவித்துள்ளார்..

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக கோரி அழைப்பாணை அனுப்பியும் ஆஜராகவில்லை. தனது முறையீட்டு மனுவில் சாட்சியாக தெரிவித்த திரு ராமச்சந்திர தேவர் அவர்களும் இம்முறைமன்ற நடுவத்தில் இப்பொருள் தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய ஆஜராகக் கோரி அழைப்பாணை அனுப்பியும் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை. திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கள ஆய்வு மற்றும் விசாரணை அறிக்கையில் கழுகுமலை பேரூராட்சியில் வரவேற்பு பலகைகள் மற்றும் தெருப்பெயர் பலகைகள் நிறுவியதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை எனவும், அரசு விதிகள் முறையாக பின்பற்றப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட பின்னரே ஒப்பந்தக்காரருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளதாக

தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு 2013 ம் ஆண்டு நிறுவப்பட்ட பெயர் பலகைகள் இயற்கை சீற்றங்களாலும், சமூக விரோதிகள் மற்றும் சிறு குழந்தைகளின் விளையாட்டு போக்கினாலும் சேதமடைந்தததாகவும் இவைகள் மீள மேற்படி ஒப்பந்தக்காரரால் சரிசெய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளதாகவும் தனது விசாரணை அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

எனவே முறையீட்டு மனுதாரர் தனது தரப்பிலான விளக்கத்தினை சமர்ப்பிக்க ஆஜராகாத நிலையிலும், மேற்படி தெருப் பெயர் பலகைகள் நிறுவியதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை, சேதப்படுத்தப்பட்ட எழுத்துக்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரால் மீள சரி செய்யப்பட்டுள்ளதாகவும் திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையும் வரப்பெற்றுள்ளது.

இருப்பினும் சிறு குழந்தைகளின் விளையாட்டு போக்கினாலும் பெயர் பலகைகள் சேதப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்ட காரணம் ஏற்புடையதாக இல்லை. எனவே பெயர் பலகைகள் சரி செய்யப்பட்தையும் ஒப்பந்தக்காரரது பணி செயல்பாட்டில் குறைபாடாக இருந்திருப்பின் சம்பந்தப்பட்வர்களிடமிருந்து தொகையினை ஈடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படவேண்டுமெனவும் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 20- ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடன் ஆணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்க்காக

பெறுநர்

1.திரு. எஸ். மன்மதராஜன்,
கழுகுமலை மக்கள் நல கூட்டமைப்பு,
கழுகுமலை அஞ்சல் -628 552,
கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
கழுகுமலை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்,

3. பேரூராட்சிகள் உதவி இயக்குனர்,
திருநெல்வேலி மண்டலம்.